**அரியப்பம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.ஆர்.நாகராஜன்**

ந.க.எண்.276/2020/அ1 நாள். 26.05.2023

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – அரியப்பம்பாளையம் பேரூராட்சி – அரியப்பம்பாளையம் கிராமம் – ரீ.ச.எண். 220/4B1, 221/4A–ல் 1.30 ¼ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு – இறுதி அங்கீகாரம் வழங்கி – உத்திரவிடுதல் –தொடர்பாக.

பார்வை :
1. சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலர் ஆவண எண். 5189/2022 நாள்.08.07.2022.
2. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.60 நாள்.28.04.2023.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு மாவட்டம் அவர்களின் ந.க.எண். 2538/2022/ஈமா–2 நாள்.27.07.2022.
4. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.61 நாள்.28.04.2023

---x---

உத்திரவு : –

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அரியப்பம்பாளையம் பேரூராட்சி, எல்லைக்குட்பட்ட அரியப்பம்பாளையம் கிராமம், ரீ.ச.எண். 220/4B1, 221/4A–ல் 1.30 ¼ ஏக்கர் பரப்பளவில் திரு.எஸ்.ஏ.பழனிசாமி 128 ரோஜாநகர் அரியப்பம்பாளையம் என்பவர் அமைக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு பார்வை 1ல் காணும் சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ஆவணத்தின்படி மேற்படி உரிமையாளரால் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடத்தை அரியப்பம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் பெயருக்கு தானப்பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளதை, பார்வை 2ல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதத்தின்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வரைபட ஒப்புதல் வழங்கி மனையிடங்களுக்கு ம.வ/ஈமா எண்.235/2022 எண்ணிட்ட வரைபடம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 4ல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு மாவட்டம் அவர்களால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அனுமதிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 2538/2022/ஈமா–2 நாள்.27.07.2022ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மனையிடங்களுக்கு இறுதி ஒப்புதல் அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

செயல் அலுவலர், 26/5/23
அரியப்பம்பாளையம் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

26/05/2023

இணைப்பு – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் கடிதம் நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு வரைபடம்

பெறுதல்

திரு.எஸ்.ஏ.பழனிசாமி 128 ரோஜாநகர் அரியப்பம்பாளையம்

நகல் –

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர் சத்தியமங்கலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.